www.tamilarangam.net



# ஈழம் தோல்வி கண்டதா? தோற்கடிக்கப்பட்டதா? பகுதி 3

தாமரை காருண்யன்

**காரணம் தேடும் கட்டுரைத் தொடர்**



*மூச்சடங்கிப் போகும் வேளை - 2*

**15.05.2009. வெள்ளிக்கிழமை மாலை நேரம்.**

முள்ளிவாய்க்கால் பகுதியில் களமுனைக்குத் தலைமை தாங்கி நின்ற தளபதி சூசை மலேசியாவில் இருந்த விடுதலைப்புலிகளின் அனைத்துலக உறவுப் பொறுப்பாளர் கேபியுடன் அவசர அவசரமாகத் தொடர்பு கொள்கிறார்.

அவரது குரலில் கோபமும் ஒருவகைப் பதற்றமும் இருந்தது.

'இங்கு எல்லோரையும் சாகத்தான் விடப்போகிறீர்களா' என்று உரத்த குரலில் கேட்கிறார்.

உரிமையுடனும் அவலம் நிரம்பிய ஒரு களத்தில் நிற்கும் தளபதிக்குரிய பொறுப்புணர்வோடும் கேபியுடன் உரையாடத் தொடங்குகிறார் சூசை.

கேபி நேரடியாகத் தலைவர் பிரபாகரனால் வழிநடத்தப்பட்டு வந்தவர். விடுதலைப்புலிகளின் தளபதிகள் எல்லோருக்கும் கேபியுடன் நேரடியான தொடர்பிருந்ததில்லை. ஆனால் சூசைக்கு கேபியுடன் முன்னரே தொடர்பிருந்தது.

கேபி விநியோகப் பணிகளில் ஈடுபட்டிருந்த காலத்தில், அனைத்துலகக் கடற்பரப்பில் அவரது பொறுப்பில்தான் கப்பலின் கட்டளைப் பொறுப்பு இருப்பது வழக்கம். கப்பல் குறிப்பிட்ட இடத்திற்கு வந்தவுடன் கேபியிடமிருந்து சூசை அப் பொறுப்பை ஏற்றுக் கொள்வார். இதனால் கேபியின் வேலையின் முக்கியத்துவம் சூசைக்கு நன்கு தெரிந்திருந்தது. அதனால் சூசைக்கு கேபி மீது உள்ளார்ந்த மரியாதை இருந்தது.

முன்னரே கேபியுடன் தொடர்பிருந்த காரணத்தால் உரையாடலின் போது எவ்வித தயக்கமுமின்றி களநிலைமையை வெளிப்படுத்துகிறார் சூசை.

காணும் இடமெங்கும் கொல்லப்பட்ட மக்கள் மற்றும் போராளிகள் உடல்கள் சிதறிக் கிடப்பதனையும் காயம்பட்ட போராளிகளும் மக்களும் மருத்துவக் கவனிப்பின்றி நிமிடத்துக்கு நிமிடம் இறந்து கொண்டிருப்பதனையும் வேதனையுடன் எடுத்துக் கூறுகிறார்.

இவ்வாறு இறந்தும், இறந்து கொண்டிருப்போரினதும் தொகை 25,000 க்கும் மேலாக இருக்கும் என்பதனை எடுத்துக்கூறி, அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கம் உடனடியாக யுத்தமுனைக்கு வந்தாக வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார்.

யுத்தப்பகுதியில் அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கத்தினைத் தவிர அனைத்து வெளிநாட்டு உதவி நிறுவனங்களும் செப்டம்பர் 2008 இலிருந்தே சிறிலங்கா அரசால் வெளியேற்றப்பட்டு விட்டன.

செஞ்சிலுவைச் சங்கமும் உள்ளூர் பணியாளர்களை நம்பியே இயங்கிக் கொண்டிருந்தது. பொருட்கள் விநியோகிக்கவும் காயம்பட்டவர்களை மருத்துவச் சிகிச்சைக்கு எடுத்துச் செல்லவும் கப்பல் வரும்போது அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வெளிநாட்டுப் பணியாளர்களும் வருவார்கள். கப்பல் திரும்பும் போது அதே கப்பலில் அவர்களும் திரும்பி விடுவார்கள்.

முள்ளிவாய்க்கால் கடற்பகுதியும் சிறிலங்காப் படையினரால் முற்றுகையிடப்பட்ட பின்னர் செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல் போக்குவரத்தும் நின்று போயிற்று. சூசை, கேபியுடன் தொடர்பு கொள்ளும் போது களத்தில் இயங்கி வந்த மருத்துவ ஏற்பாடுகள் எல்லாம் குலைந்து போயிருந்தன.

வெளிநாடுகளில் மக்கள் போராட்டங்களைத் தீவிரப்படுத்துவதன் ஊடாக நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை கொண்டுவர மேற்கொள்ளப்பட்ட முயற்சி வெற்றியடையாத சூழல். கனரக ஆயுதப் பாவனை நிறுத்தப்பட்டிருப்பதாக தொடர்ந்து பொய்யுரைத்துக் கொண்டு சிறிலங்கா தனது கனரக ஆயுதங்களால் முள்ளிவாய்க்கால் பகுதி மீது நெருப்பள்ளி வீசிக் கொண்டிருந்தது.

உடனடியாகச் சண்டை நிறுத்தப்படாவிட்டால் மேலும் பெருந்தொகையான மக்களும் போராளிகளும் கொல்லப்பட்டும் காயப்பட்டும் போகும் அவலம் நிகழ்ந்து விடும். மருத்துவ வசதிகள் இன்மையால் உயிர் தப்பக்கூடியவர்களைக்கூடக் காப்பாற்ற முடியாத நிலை.

'நாங்கள் ஆயுதங்களை மௌனிக்கத் தயாராக இருக்கிறோம். உடனடி யுத்த நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்' என சூசை கேபியைக் கோருகிறார்.

'இது தலைவரின் செய்தியா' எனக் கேபி கேட்க 'ஓம். தலைவரின் முடிவு தான்.' என்கிறார் சூசை.

'இன்னும் ஒரு வாரம் தாக்குப் பிடிப்பீர்களா' என்று மீண்டும் கேபி கேட்க 'இரண்டு நாட்களுக்கு மேல் தாக்குப் பிடிப்பது கஸ்டம்'. சூசை உரையாடலை முடித்துக் கொள்கிறார்.

களநிலை இறுக்கமடைந்து வந்த பின்னர் கேபியும் பிரபாகரனும் பாதுகாப்புக் காரணங்களுக்காக நேரடித் தொலைபேசி உரையாடலைத் தவிர்த்துக் கொண்டார்கள். இவர்கள் இருவருக்குமிடையே செய்திப் பரிமாற்றம் நம்பகமான போராளி ஒருவர் ஊடாகவே நடந்து வந்தது. இப்போது இந்தச் செய்திப் பரிமாற்றம் சூசைக்கூடாக நடைபெறுகிறது.

## புதினங்கள்

பிரிஸை வெளியுறவு அமைச்சராக்கியதற்கான ராஜதந்திர இலக்கு
பல வகுப்பறைகள் மரங்களுக்குக் கீழே நடக்கின்றன
ஊரான ஊரிழந்தோம்! ஒற்றைப் பனைத் தோப்பிழந்தோம்!!
Private: சொல்லப்படாத எங்கள் கதைகள்
தலைவர் பிரபாகரன் வீரச்சாவு குறித்து தொடரும் சர்ச்சை: காரணங்கள் எவை? கட்டுரைத் தொடர் - 17
முள்ளிவாய்க்கால் - மூச்சடங்கிய இறுதிக் கணங்கள்!
முள்ளிவாய்க்கால் படுகொலையின் தத்துவப் பின்னணி
கிழக்கில் கிடந்த பச்சைச் சூரியன்!
தேசியத் தலைவருக்கு விளக்கு வைக்கத் துடிக்கும் மார்க் அன்ரனிகள்

## செய்திகள்

Microsoft OLE DB Provider for ODBC Drivers

error '80040e37'

[Microsoft][ODBC SQL Server Driver][SQL Server]Invalid object name 'tblContents'.

/right-col-secindex.asp, line 132

www.tamilarangam.net

பிரபாகரனுக்கு ஆயுதங்களை மௌனிக்கும் முடிவு யுத்தநிறுத்தத்தைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கை இருக்கவில்லை. இருந்த போதும் அப்போதிருந்த அவலமான சூழலில் களமுனையில் நின்ற தளபதிகளின் கருத்தை அவரால் புறம் தள்ள முடியவில்லை.

யுத்தநிறுத்தம் வரும் என்ற நம்பிக்கை இல்லாதமையால் முற்றுகையை உடைத்து வெளியேறும் திட்டத்திற்கான முனைப்பில் பிரபாகரன் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

சூசையின் ஊடாகத் தலைவரின் செய்தி கிடைத்தவுடன் முழு மூச்சுடன் செயலில் இறங்கினார் கேபி.

இது ஒரு வெள்ளிக்கிழமை மாலை. அடுத்த இரு தினமும் சனி ஞாயிறு விடுமுறை நாட்கள். அனைத்துலக சமூகத்தின் பணியகங்கள் வழமையாக ஓய்வில் இருக்கும் நாட்கள்.

இருந்தும் நிலைமையின் தீவிரம் காரணமாக அனைத்து முனைகளிலும் செயற்பாடுகளை முடுக்கி விட்டார் கேபி. அவசர நிலைமைகளில் இயங்கும் அனைத்துலக சமூகத்தின் பொறிமுறைகளுக்கூடாக நுழைந்து உரிய இடங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்.

ஜெனீவாவில் இருந்த தொடர்பின் ஊடாக அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைச் செயலகத்துடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. தரைவழிப்பாதையால் யுத்தமுனைக்குச் செல்வதற்கு சம்மதம் தெரிவித்தது அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கம்.

செஞ்சிலுவைச் சங்கம் தரைவழிப் பாதையால் யுத்தமுனைக்குச் செல்வதானால் சிறிலங்கா அரசு சம்மதம் கொடுத்தாக வேண்டும். இவர்கள் களமுனைக்குச் செல்லும் சமயம் தாக்குதலை நிறுத்தியாக வேண்டும். சிறிலங்கா அரசு இவற்றிற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை. செஞ்சிலுவைச் சங்கமும் யுத்தம் நடைபெறும் பகுதிக்கு போகமுடியவில்லை.

களச் சூழல், ஆயுதங்களை மௌனிக்கும் இயக்கத்தின் நிலைப்பாடு இவற்றை வெளிப்படுத்தி உடனடியாகத் தாக்குதல் நிறுத்தம், தொடர்ந்து யுத்த நிறுத்தம் என அவசரக் கோரிக்கையை அனைத்துலக சமூகத்திடம் முன்வைத்தார் கேபி.

விடுதலைப்புலிகள் இயக்கம் எடுத்த இந்த நிலைப்பாட்டிற்கு அனைத்துலக சமூகம் மத்தியில் வரவேற்பிருந்தது. ஆனால் 'காலம் மிகவும் பிந்தி விட்டது. இக் குறுகிய காலத்திற்குள் ஒரு ஏற்பாட்டிற்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு. எனினும் நாம் முயற்சித்துப் பார்க்கிறோம்' என்ற பதிலே பல முனைகளிலிருந்தும் வந்தது.

விடுதலைப்புலிகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற அக்கறை அனைத்துலகச் சமூகத்திற்கும் இருந்ததாகக் கூறமுடியாது. இருந்தும் ஆயுதங்களை மௌனிக்க விடுதலைப்புலிகள் தயாராக இருந்த போதும், மிகப் பெரும் படுகொலை இடம் பெறுமாயின் அது தமிழரிடம் ஒரு பெரும் வடுவாகப் பதிவாகிப் போய், எதிர்கால இன இணக்கப்பாட்டுக்கு குந்தகம் விளைவித்துவிடும் என்ற கவலை அவர்களுக்கு இருந்தது.

இதனால், சிறிலங்காவில் உள்ள மேற்குலகத் தூதராலயங்கள், சிறிலங்கா அரசுடன் யுத்தநிறுத்தம் குறித்து தொடர்பு கொண்டன. எனினும் பயன் ஏதும் இல்லை. எத்தனை ஆயிரம் மக்களைப் படுகொலை செய்தாவது விடுதலைப்புலிகளை முற்றும் முழுவதுமாக அழித்து விடுவது என்பதில் சிறிலங்கா அரசு பிடிவாதமாக இருந்தது.

காலதாமதமாகும் ஒவ்வொரு மணித்துளியும் பெரும் ஆபத்து நிறைந்ததாகவே இருந்தது.

மணித்துளிகள் கரைந்து கொண்டிருந்தன. சூசையும் ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும் கேபியுடன் தொடர்பில் வந்து கொண்டிருந்தார். தாம் எடுக்கும் முயற்சிகளை கேபி சூசையுடனும் களநிலைமைகளை சூசை கேபியுடனும் பரிமாறிக் கொண்டனர்.

முயற்சி தொடர்ந்தது. தாக்குதல் நிறுத்தமோ யுத்த நிறுத்தமோ வந்தபாடாகவில்லை.

16.05.2009 மாலை முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து பெருமளவு மக்கள் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். இவர்களோடு பெரும் தொகையான புலிகளும் வெளியேறிக் கொண்டார்கள்.

களத்தினின்று வெளியேறி இராணுவத்திடம் செல்வதற்கு மறுப்பவர்களும் வெளியேற மனமின்றித் தவித்து நிற்பவர்களுமே எஞ்சிநின்றனர்

மக்கள் பாதுகாப்பு என்ற காரணத்தை முன்வைத்து யுத்தநிறுத்தத்ததை அனைத்துலக சமூகத்திடம் தொடர்ந்து வலியுறுத்தும் வாய்ப்பும் மக்கள் பெருந்தொகையாக வெளியேற்றப்பட்டதோடு நலிந்து போயிற்று.

மீதமுள்ளோர் எந்நேரமும் கொல்லப்படும் அவல நிலை. எவ்வித சாட்சிகளுமின்றி மிகப்பெரும் படுகொலை நடைபெறக்கூடிய ஆபத்து உருவாகி விட்டது.

**17.05.2009 முள்ளிவாய்க்கால் பகுதி**

பெருந்தொகையானோர் வெளியேற்றப்பட்டு விட்டமையால் எஞ்சியிருந்த மக்கள் உட்பட அனைவரும் சிறிலங்காப் படைகளைப் பொறுத்தவகையில் அழித்தொழிக்கப்பட வேண்டிய நேரடி இராணுவ இலக்காகி விட்டனர்.

களத்தின் அவலத்தை புலம் பெயர்ந்த தமிழ் மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் தனது குரலில் செய்மதித் தொலைபேசி மூலம் ஊடகங்களுக்கு விபரிக்கிறார் சூசை.

சூசையின் செய்தி: ஒலிவடிவம்

களத்தில் உக்கிரமான சண்டை நடந்து கொண்டிருந்தது. சிறிலங்கா படையினரின் எறிகணைகள் தீப்பிழம்பைக் கக்கிக் கொண்டிருந்தன. வானம் அக்கினிக்குழம்பைக் கொட்டுவது போலக் காட்சி இருந்தது.

களமுனையில் இருந்த போராளிகளின் வோக்கி ரோக்கிகளும் பற்றரி பிரச்சினை காரணமாகவும் வேறு தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாகவும் ஒழுங்காகத் தொழிற்படவில்லை. இதனால் போராளிகளுக்கு இடையேயான தொடர்பும் மிகவும் சீர்குலைந்திருந்தது.

அண்மையில் உள்ள போராளிகளிடம் நேரே சென்று பேசுவதுகூட தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக இலகுவில் சாத்தியப்படவில்லை.

திட்டமிட்டு ஊடறுப்புத் தாக்குதல் செய்து எதிரியின் முற்றுகையை உடைப்பதுவும் இலகுவானதாக இருக்கவில்லை. இருந்தும் இறுதிவரை, இயன்றளவுக்கு எதிரிப்படைக்கு இழப்பினை ஏற்படுத்துவதில் போராளிகள் உறுதியாக இருந்தார்கள்.

விடுதலைப்புலிகளின் புலனாய்வுப்பிரிவுத் தலைவர் பொட்டம்மான் மேலும் 70 போராளிகளுடன் படகுகள் வழியாக நந்திக்கடலை ஊடறுத்து, முற்றுகையை உடைத்துப் புறப்படும் நகர்வை ஆரம்பித்து விட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைவர் பிரபாகரனும் தனது அணிகளுடன் முற்றுகை ஊடறுப்புத் தாக்குதலை மேற்கொண்டவாறு முன்னேறத் தொடங்கி விட்டார். இம் முறியடிப்புத் தாக்குதல்களை ஆரம்பிக்கும் முன்னர் பிரபாகரனின் பாதுகாப்பு அணியும் தாக்குதல் அணியும் தாம் கிழக்குப் பகுதியில் நிலைகொண்டிருந்த தளபதிகளுடன் வைத்திருந்த தகவல் தொடர்புகளை பாதுகாப்புக் காரணங்களுக்காக நிறுத்திக் கொள்கின்றன.

இடுப்புப் பகுதிக்கு கீழ் இயக்கம் இழந்திருந்த காரணத்தால் கஸ்ரோவால் முற்றுகை உடைப்பு முயற்சிகளில் ஈடுபட முடியவில்லை. தன்னுடன் நின்ற போராளிகளை அனுப்பி விட்டு அவர் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறார்.

ஒவ்வொரு அரைமணி நேரத்துக்கொருமுறை கேபியுடன் தொடர்பில் இருந்த சூசை, அடுத்த அரைமணி நேரத்திற்கு தான் தொடர்பில் வரவில்லை என்றால், தான் உயிருடன் இல்லை என்று அர்த்தம் எனக் கூறிச் செல்கிறார்.

தொடர்ந்தும் தொடர்பில் வந்து கொண்டிருந்த சூசை ஒரு கட்டத்தில் மிக அதிர்ச்சிகரமான தகவலை கேபியிடம் சொல்கிறார்.

'தலைவர் வீரச்சாவடைந்து விட்டார். பொட்டர் அணியிலும் எவரும் மிஞ்சவில்லை'.

அதிர்ந்து போகிறார் கேபி. மேலதிகத் தகவலுக்கு சூசை மீண்டும் வரவில்லை.

அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசன் மற்றும் புலித்தேவன், காயமடைந்த போராளிகள் உள்ளடங்கலாக ஏறத்தாழ 300 பேர், அனைத்துலக ஏற்பாட்டுடன் பாதுகாப்பு உத்தரவாதம் பெற்று இராணுவத்திடம் சரணடையும் முயற்சியினை மேற்கொண்டனர். எனினும் 18.05.2009 அதிகாலை அவர்கள் அனைவரையும் சிறிலங்கா படையினர் சுட்டுக் கொன்றனர்.

நரவேட்டை ஆடுபவர்களாக மிகப்பெரும் மனிதப்படுகொலையை சாட்சிகளின்றி நடத்தி முடித்தது சிறிலங்கா அரசு.

இயக்கக் கட்டமைப்பின் அனைத்துப் பிரிவுகளுக்கும் முள்ளிவாய்க்கால் பகுதியுடன் இருந்த தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிட்டது.

ஆம். முள்ளிவாய்க்கால் பகுதி மூச்சடங்கிப் போனது.

(அடுத்த சனிக்கிழமை (06.02.2010) தொடரும்)

1/29/2010 5:26:45 PM

**உங்கள் கருத்துக்களை பதிவு செய்க:**

பெயர்

ஊர்


நாடு

மின்னஞ்சல்

கருத்து (max. 2000 characters)

அ Press F8 for English Powered by **Quillpad**

படத்தில் உள்ள எழுத்துக்களை பதிவு செய்க:



Change Image

Send Comment

**வாசகர் கருத்து:**

Thank you for such interesting articles Thamarai. Yes, we must have a clear historical and current world view of our position, and understand the nature of the forces against us, as well as our mistakes. Personally I believe we have yet to truly grasp the political power we have as a people so oppressed - we have not yet mastered the skills we need to move our struggle forward politically. We should continuously question how we are seen in this international environment, and find ways of developing ourselves so that we are capable of taking up the challenge of changing that - at the moment in the diaspora we are still behaving like 'a bull in a china shop', and because of that we failed to draw the international community to our side. We in the diaspora have still not considered our own mistakes, and how that contributed to the movement's military defeat in the land.

Poongkothai, London 2/1/2010 12:48:41 PM

**மேலும்**


தலைவர் பிரபாகரன் வீரச்சாவு குறித்து தொடரும் சர்ச்சை: காரணங்கள் எவை? கட்டுரைத் தொடர் - 17
போராளிகள் குறித்து தலைவர் பிரபாவின் கவலை - தொடர் - 16
புலிகளின் கடல்வழி விநியோக நுட்பங்கள்! கட்டுரைத் தொடர் - 15
புலிகளின் மரபுப் போர்த் தகமை வளர்ந்தது எப்படி? கட்டுரைத்தொடர்- 14
கிட்டுவை தமிழீழம் இழந்த கதை! கட்டுரைத் தொடர் - 13
ராஜீவ் கொலைச் சம்பவம் ஏன் நிகழ்ந்தது? கட்டுரைத் தொடர் - 12
சிறிலங்கா + தமிழீழம் = - இந்தியா: கட்டுரைத் தொடர் - பகுதி 11
ஒஸ்லோ 'பிரகடனத்தை' புலிகள் ஏற்றார்களா? இல்லையா? பகுதி 10
சிறிலங்கா - தமிழீழ முரண்பாட்டின் புவிசார் அரசியல் அடிப்படை- பகுதி 9
இந்திய - தமிழீழ புவிசார் அரசியல் முரண்! ஈழம்: கட்டுரைத் தொடர் - 8


»மேலும் சுவடுகள்